# KEY ANSWER FOR
# QUARTERLY EXAMINATION --SEP-2019
# ECONOMICS
# 12TH STD

TIME:- 2.30 hrs., MAX. MARKS: 90

## PART-A

I. பொருத்தமான விடையினை தெரிவு செய்க. 20 X 1 = 20

| Q.NO | Answer | Q.No | Answer |
|---|---|---|---|
| 1 | இ. ராக்னர் பிரிக்ஸ் | 11 | இ. 3 4 2 1 |
| 2 | இ. வருவாய் | 12 | இ. மும்பை |
| 3 | ஆ. மூன்று | 13 | அ. விலைகள் அதிகரிப்பு |
| 4 | ஆ செலவிடக்கூடிய வருமானம் | 14 | ஈ. இந்திய ரிசர்வ் வங்கி |
| 5 | அ. Y = w+r+i+π+(R—P ) | 15 | இ. ஜூலை 1982 |
| 6 | ஆ. C + I + G + (X - M) | 16 | அ. ரூ.500 மற்றும் ரூ.1000 |
| 7 | அ. பூஜ்யம் | 17 | ஆ. அந்நிய செலாவணி |
| 8 | ஈ. சேமிப்பு | 18 | இ. ஏற்றுமதி--இறக்குமதி |
| 9 | அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும். | 19 | அ வாஷிங்டன் டிசி |
| 10 | அ) 1 | 20 | ஈ. சீனா |

## PART-B

*எவையேனும் 7 வினாவிற்கு ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.*
*வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்* **7 X 2 = 14.**

| Q.no | | Marks |
|---|---|---|
| 21 | **பண வீக்க ம் என்ற பதத்தின் பொருள் தருக.** பண வீக்க ம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும். | 2 |
| 22 | **GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.** GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக் கும் நிகர வருமானம். | 2 |
| 23 | தபோதுள்ள சூழ்நிலையில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள் மற்றும் திறமைகளை அந்நிறுவன உழைப்பாளர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை எனில் அவ் உழைப்பாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படுகிறது. | 2 |
| 24 | வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். கணிதரீதியாக APC = C / Y. | 2 |

| | | |
|---|---|---|
| **25** | வாக்கர் கூற்றுப்படி "பணம் எதைச் செய்கிறேதா, அதுதான் பணம் " | **2** |
| **26** | நெகிழிப் பணம் , காகிதப் பணத்திற்கு மாற்றாக உள்ளது. இது நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும். எ.கா. ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, வணிக நிறுவன அட்டை, அந்நிய செலாவணி அட்டை, மற்றும் சூட்டிகை அட்டை. | **2** |
| **27** | பண அளிப்பு மற்றும் வட்டி விகிதத்தை மேலாண்மை செய்யும் நோக்கோடு உருவாக்கப்படும் பேரினப் பொருளியல் கொள்கையே பணவியல் கொள்கை எனப்படுகின்றது. | **2** |
| **28** | **பண மதிப்பி**றக்கம் **:** ஒரு நாட்டின் பணத்தைமற்ற நாடுகளின் பணமாக மாற்றும் வீதத்தைஅந்நாட்டின் மைய வங்கி குறைத்து நிர்ணயம் செய்தல் | **2** |
| **29** | புவியின்ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக்காரணிகள் இடப் பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே பொது சந்தை. உதாரணம்: ஐரோப்பிய பொது அங்காடி | **2** |
| **30** | **பேரியல் பொருளியலின் இலக்கண ம் தருக.** 'Macro' என்ற சொல்லின் பொருள் "பெரிய" என்பது ஆகும் பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப் பு முழுமையையும் படிப்பது ஆகும். 'பேரியல் பொருளாதாரத்தை வருவாய் கோட்பாடு' எனவும் அழைப்பர். | **2** |

# PART-C


***எவையேனும் 7 வினாவிற்கு ஒரு பத்தி அளவில் விடையளிக்கவும்.***
***வினா எண் 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்*** **7 X 3 = 21.**

| **Q.no** | | **Marks** |
|---|---|---|
| **31** | 1. முதலாளித்துவ பொருளாதார அமைப்பு.<br>2. சமதர்ம பொருளாதார அமைப்பு.<br>3. கலப்புப் பொருளாதார அமைப்பு. | **3** |
| **32** | இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது<br>ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். | **3** |
| **33** | கீன்சு கோட்பாட்டின்படி ஒரு பொருளாதாரத்தின் தொகுதேவை தான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது.<br>தொகுதேவை நான்கு கூறுகளை கொண்டுள்ளது அவை<br>1. நுகர்வுத் தேவை, 2. முதலீட்டுத் தேவை,<br>3. அரசுச் செலவு. 4. நிகர ஏற்றுமதி.<br>**AD = C + I + G + (X - M** | **3** |
| **34** | 1. வரி பெருக்கி 2. வேலை வாய்ப்பு பெருக்கி<br>3. வெளிநாட்டு வர்த்தக பெருக்கி 4. முதலீடு பெருக்கி. | **3** |

| | | |
|---|---|---|
| **35** | **தேவை -இழுப்பு பணவீக்கம் .**<br>பண்டங்களுக்கான் தேவை அதிகரிக்கும் போது விலை அதிகரிக்கிறது. இது தேவை இழுப்பு பணவீக்கம் எனப்படும்<br>**செலவு உந்து பணவீக்கம் .**<br>உற்பத்திச் செலவு அதிகரிக்கும் போது பண்டங்களுக்கான் விலை அதிகரிக்கிறது. இது செலவு உந்து பணவீக்கம் எனப்படும் | **3** |
| **36** | 1. நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர் ச்சியை மேம்படுத்தும் வகை யில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக மறுகடனை வழங்குகிறது.<br>2. மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது<br>3. மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.<br>4. நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது. | **3** |
| **37** | 1. தூய வாணிபக் கோட்பாடு<br>2. கொள்கைச் சச்சரவுகள்<br>3. பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்<br>4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் | **3** |
| **38** | சிலநாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டுப் பொருளாதா ரத்துடன் தங்களு டையப் பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன.<br>நாடுகளுக்கிடையே சுமூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பல விதங்களில் அமைகின்றன.<br>சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் தடையற்ற வாணிகப்பகுதி, சுங்கத்தீர்வை ஒன்றியம், பொது சந்தை மற்றும் பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்கிறது | **3** |
| **39** | 1. அதிக உற்பத்திக்கு மற்றும் வேலையின்மைக்கு வாய்ப்பில்லை.<br>2. நாட்டில் பய்ன்படுத்தாத வளங்களை முழுமையாக பயன்படுத்தி முழுவேலைவாய்ப்பை அடைதல்<br>3. விலைக் கருவி செயல்படுவதால் அரசின் தேவை இல்லை.<br>4. சேமிப்பு மற்றும் முதலீட்டுச் சம நிலை வட்டி வீத மாற்றத்தால் தீர்மானிக்கப்படும்.<br>5. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும். | **3** |
| **40** | **தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக**<br>தலா வருமானம் என்பது ஒர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் ஆண்டு சராசரி வருமானமாகும். தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்க கிடைப்பது தலா வருமானம் ஆகும். | **3** |

# PART-D

*ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.* **7 X 5 = 35**


| Q.n | | Marks |
|---|---|---|
| **41**<br>அ | பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.<br>**பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை.**<br>1. **தேசிய வருவாய்** .தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறை களின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்களாகும்.<br>2. **பண வீக்கம்** -பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.<br>3. வாணிபச் சுழற்சி.-**பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத் தாழ்வு மற்றும் வாணிப சுழற்சியால் ஏற்படும் பிரச்சினைகளை சந்திக்கின்றன** .<br><br>4. வறுமை மற்றும் வேலையின்மை --**வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப்**<br>**பெரிய பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.**<br>5. **பொருளாதார வளர்ச்சி.**-பேரியல் பகுத்தாய்வின்மூலம் தான்ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்துக் கொள்ளமுடியும்.<br>**6. பொருளாதார கொள்கைகள். -**பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. | **5** |
| ஆ | 1. பணஅளவுக் கோட்பாட்டின் மையக்கருத்து பணஅளிப்பின் அளவு மாற்றம் அடையும்போது விலையும் மாற்றம் அடையும் .<br>2. **MV** = **PT** என்பது பணப் பரிமாற்றத்தின் சமன்பாடு<br>3. ஒரு நாட்டில் மொத்த பண அளிப்பு ( MV ) மொத்த பணத் தேவைக்கு (PT) சமமாகஇருக்கும்.<br>4. மேற்சொன்ன சமன்பாடு காகிதப் பணத்தை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது.<br>5. தற்காலத்தில் பண அளிப்பின் பெரும்பகுதி காசோலைகள், மாற்றுச் சீட்டுக்கள், மற்றும் ஏனைய கடன் கருவிகள் உள்ளடங்கி இருக்கிறது. எனவே இச்சமன்பாட்டை கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கலாம். $PT=MV + M^1 V^1$ | **5** |
| **42**<br>அ | i. இல்லங்கள் (House hold) ii. நிறுவனங்கள் (Firms)<br>iii. அரசு (Government) iv. வெளியுறவுத் துறை(External Sector)<br>வெளியுறவு துறையில் அதிகமாக அடங்குவது ஏற்றுமதிகள் (Exports) மற்றும் இறக்குமதிகள் (Imports) இதைவரைபடம் விளக்குகிறது.<br><br>நான்கு துறைப�ொருளாதாரத்தில், ஒட்டு மொத்தசெலவானது, உள்நாட்டு செலவுகள் (C + I + G) மற்றும் நிகர ஏற்றுமதி ( X – M) ஐ உள்ளடக்கும். $Y = C + I + G + (X – M)$ | **5** |
| ஆ | 1.கீன்ஸ் உளவியல் அடிப்படையில் நுகர்வுச் சார்பை உருவாக்கினார்.<br>2. மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்ய மாட்டார்கள் என இவ்விதி கூறுகிறது.<br>3. வருமானம் உயரும்போது ,நுகர்வுச் செலவும் அதிகரிக்கும் ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்<br>4. அதிகரித்த வருமானம், எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பை அதிகரிக்கச் செய்யும்<br> | **5** |

| | | |
|---|---|---|
| | 5. வரைபடத்தில் வருமானம் Y யிலிருந்து Y1, Y2 ஆக அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும் ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்<br>6. எனவே இவ்விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்ய மாட்டார்கள் என எடுத்துக் கூறுகிறது. | |
| **43**<br>அ | 1 மொத்த உள் நாட்டு உற்பத்தி 2. நிகர உள் நாட்டு உற்பத்தி<br>3. மொத்த தேசிய உற்பத்தி 4. நிகர தேசிய உற்பத்தி<br>5. காரணிசெலவில் நிகர தேசிய உற்பத்தி 6. தனிநபர் வருமானம்<br>7. செலவிடக்கூடிய வருமானம் 8. தலாவருமானம்<br>9. உண்மை வருமானம் 10. GDP குறைப்பான் | **5** |
| ஆ | சந்தை விதி அதிக உற்பத்திக்கு வாப்பு இல்லை என்கிறது. ஆனால் கீன்சு கூற்றுப்படி அதிக உற்பத்திக்கு வாப்பு இருக்கிறது.<br>2. கீன்சு கூற்றுப்படி அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அள்விற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இவ் விதி செயல்படாது.<br>3. பொருளாதாரத்தில் தானாக சரிசெய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது<br>4. பணம் நடுநிலையாக இருக்காது.<br>5. முழு வேலைவாய்ப்பிற்கு சாத்தியம்மில்லை என்று கீன்சு குறிப்பிடுகிறார்.<br>6. அரசின் தலையீடு அவசியம் என்று கீன்சு குறிப்பிடுகிறார். | **5** |
| **44**<br>அ | **1. உற்பத்தி முறை :-** உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறை களின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும் ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.<br>**2. வருவாய் முறை :-** உற்ப த்தி நிலைகளில் உற்ப த்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.<br>**3. செலவு முறை :-** இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தசெலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. | **5** |
| ஆ | ***1. பணத்தின் நடுநிலைத் தன்மை--***பொருளாதாரத்தில் பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் பணவியல் மாற்றங்கள் பொருளாதார அமைப்பில் இடையூறுகளை ஏற்படுத்தும்.<br>***2. விகித நிலைத்தன்மை --***பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மை ஏற்படுவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ் விகிதங்களில் நிலையற்றத் தன்மை இருந்தால் அது பன்னாட்டு வாணிபத்தை பெரிதும் பாதிக்கும்.<br>***3. விலையை நிலையாக இருக்கச் செய்தல்.***<br>விலையில் நிலைத்தன்மை, பொதுமக்களிடமும் வாணிப நடவடிக்கைகளிலும் பொதுவான நம்பிக்கையை ஏற்படுத்தும். மிதமான விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும். இது நிலையான விலையின் பண்புகளைக் கொண்டதாக இருக்கும்.<br>***4. முழு வேலைவாய்ப்பு நிலையை அடைதல்***<br>உலகப் பெருமந்தம் வேலையின்மையை அதிகரித்தது. முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாக இருந்தது. மேலும் கீன்சின் பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப் படுத்தியது.<br>***5. பொருளாதார வளர்ச்சி***<br>நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். தேவை மற்றும் அளிப்பிற்கிடையே சமநிலையை ஏற்படுத்த நெகிழ்சியுடன் கூடிய பணவியல் கொள்கை ஒரு சிறந்த வழி முறையாகும்.<br>***6. செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரித்தல்.***<br>பன்னாட்டு வணிபத்தில் ஏற்படும் சமனற்ற நிலை பொருளாதாரத்தை பெருமளவு பாதிக்கும் . ஆகவே பணவியல் கொள்கை செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரிப்பதை குறிக்கோளாக கொண்டிருக்கிறது. | **5** |

**45 அ**

கீன்ஸின்வேலை வாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.




மேலும்நுகர்வுச் சார்பு நேர்கோடு ஆகவும், முதலீடு தன்னிச்சையானது (Autonomous) எனவும் கீன்ஸின் கோட்பாடு அனுமானிக்கிறது. வரைபடத்தில்

1. $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகுத் தேவை அதிகமாக இருக்கும் ஆனால் தொகு அளிப்பு குறைவாக இருக்கும் இந்த நிலையில் அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.

2. தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' என்ற புள்ளியில் சம நிலை அடைகிறது. வேலை வாய்ப்பு $N_o$ ஆக இருக்கும்.

3. $N_o$ மற்றும் $N_f$ க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மையை காட்டுகிறது

**5**

**ஆ**

| வ. எ | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|---|
| 1. | ஒரு நாட்டிற்குள் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையே நடைபெறும் வாணிகம் | பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான வாணிகம் |
| 2. | உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல் | உழைப்பு மற்றும் மூலதனம் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது |
| 3. | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை | பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலைசுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் கடினமாக்குகின்றன. |
| 4. | விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன் படுத்தப்படுகிறது | பல நாட்டு பணங்கள் பயன் படுத்தப்படுகிறது. |
| 5. | புவி அமைப்பு மற்றும் கால நிலை சூழல் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும் | புவி அமைப்பு மற்றும் கால நிலைவேறுபடும் இயல்பு கொண்டவை |
| 6 | வாணிக மற்றும் நிதி நடை முறைகள் ஒரே மாதிரியானவை | வாணிகம் மற்றும் நிதி நடை முறை கள் வேறுபடும் போக்குக் கொண்டவை |
| 7 | அரசமைப் புமுறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை | அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடுகளிருக்கும் |

**5**

| | | |
|---|---|---|
| **46**<br>அ | <u>**அககாரணிகள்**</u><br>**1. முன்னெச்சரிக்கை நோக்கம் :** எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாகவைப்பது. எ.கா. விபத்து, உடல் நலனின்மை<br>**2. எதிர்பார்க்கும் நோக்கம் :** எதிர்கால தேவைக்கான விருப்பம். எ.கா. வயதான காலம்<br>**3. வாணிப நோக்கம் :- வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்**<br>4. **கர்வநோக்கம்** :- விட்டுச் செல்வதற்கான விருப்பம்<br>**5. பேராசைநோக்கம்** :- முற்றிலும் மோசமான உள்ளுணர்வு<br><u>**புறக் காரணிகள்**</u><br>**1) வருமான பகிர்வு:-** செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும்.<br>**2) விலை அளவு:-** விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள்.<br>**3) வட்டி விகிதம்**:- அதிக வட்டி விகிதம் சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வை குறைக்கும்.<br>4) **நிதி கொள்கை:-** அரசாங்கம் வரியை குறை க்கும் போ து, செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும் மற்றும் சமூகத்தில் நுகர் வு விருப்பம் அதிகரிக்கும்.<br>5) **நுகர்வோர் கடன்:-** சுலப தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது<br>இது நுகர்வை அதிகப்படுத்தும். | **5** |
| ஆ | உலக வங்கியின் பணிகள்<br>1. உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி<br>2. பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி.<br>3. கடன்மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்<br>4. வெ ளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கம ளித்த ல்<br>5. தொழில் நுட்ப சேவைகள் | **5** |
| **47**<br>அ | **வாணிபச் சுழற்ச்சியின் கட்டங்கள்.**<br>**i) பூரிப்பு,**<br>வளர்ச்சிக் கட்டத்தின் உச்சத்தில் பூரிப்புநிலை தோன்றும். பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்<br>**ii) பின்னிறக்கம்,**<br>பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடடிவக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள். தொடர்ந்து உற்பத்தி, வருமானம் ஆகியன குறைந்து வரும். மக்களின் நீர்மை விருப்பம் அதிகரித்து பணச்சந்தை<br>நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.<br>**iii) மந்தம்,**<br>வணிகச் சுழற்ச்சியின் மிக மோசமான கட்டம் மந்தம் ஆகும்<br>மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும். ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வாங்கும் சக்தி இல்லாததால் கிடங்குகளில் தேக்கமடைய செய்யும். மந்தத்தின் கீழ் நிலை “தொட்டி” என்றழைக்கப்படுகிறது<br>**iv)மீட்சி .**<br>இது, மந்தத்திலிருந்து பொருளாதார நடடிவக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும். அரசால் செய்யப்படும் முதலீடுகள் மூலம் | **5** |

| | | |
|---|---|---|
| | கிடைக்கும் வேலைவாய்ப்புகளினால் ஏற்படும் வருமானம் தேவையை .உயர்த்துகிறது. இதனால் கிடங்குகளில் தேக்கமடைந்த பொருட்கள் காலியாக துவங்குகிறது. இதனால், உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருவாய், கூலி, லாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன. | |
| ஆ | இந்தியாவின் மையவங்கி இந்திய ரிசர்வ் வங்கி ஆகும்.மைய வங்கிகளின் பணிகள்பின்வருமாறு<br>*1. பணஅதிகார அமைப்பு.*<br>இது நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தி பணவீக்கத்தை குறைக்கிறது மற்றும் வங்கிஅமைப்பை நிலைப்படுத்துகிறது.<br>*2. காகிதப் பண வெளியீடு.*<br>இது காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனமாகும். மேலும் பணம் மற்றும் கடன் அளவுகளை மேலான்மை செய்கிறது.<br>*3. வங்கி உரிமங்கள் வழங்குகிறது.*<br>வணிக வங்கிகள் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும்.<br>*4. அரசின் வங்கி.*<br>இது மத்திய, மாநில அரசுகளுக்கான வங்கியாகும். அரசின் நிதி தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்கிறது.<br>*5. வங்ககளின் வங்கி*<br>மைய வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கி ஆகும். வங்கிகளுக்கு கடன் வழங்குகிறது. மேலும் அவைகளின் வைப்புகளையு ஏற்கிறது.<br>*6. கடன் வழங்குவதில் கடைசி புகழிடம்*<br>வணிக வங்கிகளுக்கு தீர்க்க முடியாத நிதிச்சிக்கல்கள் ஏற்படும் பொழுது, மைய வங்கி ஈட்டுக் கடனை வழங்கி உதவுகிறது.<br>*7. அந்நிய செலாவணி பாதுகாவலன்*<br>மைய வங்கி வெளிநாட்டு பண இருப்புக்களை பாதுகாக்கும் பணியினை செய்கிறது. மேலும் சட்டப்படியான மேலாண்மையும் செய்கின்றது.<br>*8. பொருளாதாரத்தி நெறிப்படுத்துகிறது.*<br>பணவியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருமானம், செலவு, வேலைவாய்ப்பு, முதலீடு, சேமிப்பு ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது. | **5** |